# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை: திருமதி. A.முத்துசாரதா, B. L., P.G.D.P.M.**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

**2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ம் நாள் செவ்வாய்கிழமை**

**அசல் வழக்கு எண்.226/2024**

(CNR No. TNDG010023162024)

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, சின்னாளபட்டி டவுன், கீழக்கோட்டை பொம்மையசாமி கோவில் தெரு, கதவு எண்.17–4–14/42 ல் இருக்கும் P. ராஜு தேவர் மகன், இந்து, சுமார் 70 வயதுள்ள மாரியப்பன்

......... வாதி

/ எ தி ர் /

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, கீழக்கோட்டை கிராமம், சின்னாளபட்டி டவுன், A.T.S. நகர், க.எண்.35 என்ற விலாசத்தில் குடியிருக்கும் சுப்பையா அவர்களின் மகன், இந்து பழனிவேலு.

......... பிரதிவாதி

வாதிக்குப் பிரதிவாதி ரூ.18,85,500/–ஐயும் அசல் தொகை ரூ.15,00,000/–க்கு பிராது தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 12% வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரியும், இவ்வழக்கின் செலவுத் தொகையும் கோரி வாதியால் இவ்வழக்கு முன்னிடப்பட்டுள்ளது.

**தாவா மதிப்பு விபரம் : –**

ரூ. 18,85,500/– அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணச் சட்டம் பிரிவு 22–ன்படி **ரூ.56,565/–** செலுத்தப்பட்டுள்ளது.

**வழக்குமூலம் எழுந்த நாள்:–** 6.3.2022 திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, சின்னாளபட்டி டவுன், கீழக்கோட்டை கிராமத்தில் தாவா உற்பத்தி.

**வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள்** – 29.4.2024

**வழக்கு கோப்பில் எடுக்கப்பட்ட நாள்** – 7.6.2024

இந்த உரிமையியல் வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் 13.3.2025ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.V.S காந்திமதிநாதன், திரு.S. மணிகண்டன், திரு.N. முகமது இப்ராஹிம் மற்றும் திரு.N. சிவக்குமார் ஆகியோர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. B. செல்வின் பிரான்சிஸ் மற்றும் A. இளங்கோவன் ஆகியோர்கள் ஆஜராகி பின்னிட்டு பிரதிவாதி தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லையெனும் நிலையில், பிரதிவாதி அழைத்தும் ஆஜரின்றி தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், வழக்குரை, வாதி தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்

<u>தீர்ப்பாணை</u>

1. வாதியின் வழக்கு அனுமதிக்கப்படுகிறது.

2. வாதிக்குப் பிரதிவாதி ரூ.18,85,500/-ஐயும் அசல் தொகை ரூ.15,00,000/-க்கு பிராது தாக்கல் செய்த தேதி (29.04.2024) முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியுடன் செலுத்த வேண்டுமென்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3. இந்த வழக்கில் வாதிக்கு ஏற்பட்ட செலவுத்தொகையான ரூ.**66,088.00/-** பிரதிவாதி செலுத்திவைக்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

<u>**செலவு தொகை விவரம்**</u>

| வ. எண். | செலவு தொகை விபரம் | வாதிக்கு ரூ. பை. |
|---|---|---|
| 1. | வழக்குரைக்கான வில்லை | 56,565.00 |

| | | |
|---|---|---|
| 2. | வக்காலத்திற்கான வில்லை | 10.00 |
| 3. | வழக்கறிஞர் கட்டணம்(முதுநிலை) | 6,275.00 |
| 4. | வழக்கறிஞர் கட்டணம்(இளநிலை) | 7,135.00 |
| 5. | பிளிடிங் சார்ஜ் | 2,378.00 |
| | மொத்தம் | **66,088.00** |

2025-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.15 13:49:54 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
**அ.வ.எண்.226/2024**
தீர்ப்பாணை
நாள் .25.3.2025